செய்தி வெளியீடு எண்:690 நாள்:06.09.2021

**செய்தி வெளியீடு**

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முழுத்தொகையை செலுத்திய ஒதுக்கீட்டாளர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (6.9.2021) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான முழுத்தொகையை செலுத்திய சுமார் 10,000 ஒதுக்கீட்டாளர்களுக்கும், வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முழுத்தொகையை செலுத்திய சுமார் 15,000 ஒதுக்கீட்டாளர்களுக்கும், நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்களை வழங்குவதை தொடங்கி வைக்கும் அடையாளமாக 6 ஒதுக்கீட்டாளர்களுக்கு விற்பனைப் பத்திரங்களை வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் "மொழி ஞாயிறு" தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டினைப் போற்றும் வகையில் அவரது பெயர்த்தி திருமதி ரெய்ச்சல் அவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் வாடகை முறை திட்டத்தின் கீழ் ஒரு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணையினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி, மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹிதேஸ்குமார் எஸ்.மக்வானா, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9